Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகை யின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

God is faithful for the past seventy years.

Vol. 70 | யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம் பண்ணுங்கள்; சங். 22:23 | ஏப்ரல் 2024 | No.4

கிறிஸ்துவின் ஆவியால் நிரப்பப்படுங்கள்

Filled with the Spirit of Christ

A.B. Simpson (1843 - 1919)

"...**ஆவியினால் நிறைந்து**" (எபேசி.5:18) "**அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்**" (கொலோ.2:10) **நிறைவது, பரிபூரணப்படுவது** என்பது முழுவதும் நிரம்பி இனி நிரப்புவதற்கு இடமில்லை என்பதைக் குறிக்கிறது. இதனை உங்கள் மனதில் பதிக்க விரும்புகிறேன். பரிசுத்த ஆவியானவரால் எவ்வளவு நிரம்பியிருக்கிறோம் என்ற அளவையல்ல, கிறிஸ்துவை நன்கு அறிந்து கொள்ளுவதை அர்த்தப்படுத்துமல்ல, மாறாக **முழுவதுமாக** பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு ஆண்டவராகிய இயேசுவின் ஜீவனாலும் நிறைவாலும் ஆட்கொள்ளப்பட வேண்டும். பரிபூரண ஆசீர்வாதத்தைப் பெற முழுமையான நிரப்புதல் வேண்டும். பாதி நிரம்பிய நீர்த்தேக்கம் ஒருநாளும் நீர்வீழ்ச்சியாய் பாய்ந்தோட முடியாது. பாதி நிரம்பிய ஆறு அதிக சக்தியைக் கொடுப்பதில்லை. அரை குறையாக நிரப்பப்பட்ட இருதயம் "**எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானத்தை**" (பிலி.4:7) பெற முடியாது மற்றும் "**உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள்**" (யோவா.7:38) புறப்பட முடியாது.

நிரப்பப்படுதலின் தன்மை

நிரப்பப்படுதல் ஜீவனுள்ள நபரோடு தொடர்புடையது: நாம் ஒரு தாக்கத்தாலோ, உணர்ச்சியாலோ, ஒரு இணை அபிப்பிராயங்கள், சத்தியங்களாலோ, ஆசீர்வாதங்களாலோ நிரப்பப்படவில்லை. ஒரு நபரால் நிரப்பப்படுகிறோம். இது மிகவும் அதிசயமானது. இது முழுவதும் எல்லா போதனைகளிலுமிருந்து வேறுபட்டது. மனித தத்துவ நடபடிகளும், மார்க்கமும் புத்தி பூர்வமான சத்தியங்களோடும், சன்மார்க்க நிபந்தனைகளோடும், வெளிப்படையான செயல்களோடும் தொடர்புடையவை. **கிரேக்க தத்துவம்** கருத்துக்களின் ஒரு கூட்டமைப்பு. **கன்பூசியனிசம்** சன்மார்க்க ஒருதிகளின் கூட்டமைப்பு. **யூதாயிஸம்** என்பது சட்டங்களும் கொண்டாட்டங்களும் அடங்கியது. ஆனால் **கிறிஸ்தவமோ** ஒரு ஜீவனுள்ள நபரை மையமாகக் கொண்டது. அதன் முக்கியத்துவம் கிறிஸ்து நம்மில் வாழும் வாழ்வாகும். அவர் கிறிஸ்தவத்தின் தலைவரும் ஸ்தாபகரும் மட்டுமல்ல எல்லாக் காலங்களிலும் ஜீவனுள்ள இருதயமும் சாரமுமாயிருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் ஒரு காரணியும் வாய்க்காலுமிருந்து அர்பணிக்கப்பட்ட இருதயத்தில் அவர் பிரவேசித்து, பரிசுத்தப்படுத்தி, செயல்படுத்தவும் உதவுகிறார். இது கிறிஸ்தவ வாழ்வை மிகவும் எளிமைக்குக் கொண்டு வருகிறது. நமது இருதயத்தின் பல அறைகளிலும் பல விதமான நமது அனுபவங்களிலும், அபிப்பிராயங்களிலும், தாக்கங்களிலுமல்ல, நமது உள்ளத்தின் மையத்தில் அவரையும் அவரது ஜீவனையும் நிறைவையும் பெற்றுக் கொள்ள வேண்டும். பின்பு நமது வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் விதவிதமான அனுபவங்களிலும் செயல் பாடுகளிலும் அவர் வெளிப்படுகிறார்.

தேவன் நம் ஒவ்வொருவரையும் அவரது நிறைவைப் பெற்றுக் கொள்ளும் பாத்திரமாகவும், ஜீவனுள்ள விதையாகவும், செழிப்பாக்கும் நீரோடைகளாகவும், கிருபையின் கனிகளை அவரோடு உருவாக்கவும் ஏற்படுத்தியுள்ளார். கிறிஸ்துவின் ஆவியானவர் நமது பாத்திரத்தின் கொள்ளளவுக்கு தக்க, நேர்த்தியாக நிரப்பி தீருப்திப் படுத்துகிறார். எனவே அவரில்லாமல் நாம் ஒன்றுமில்லை. அவரது ஜீவனுள்ள குமாரனில் தமது முழு நிறைவையும் ஊற்றியுள்ளார். "ஏனென்றால் தெய்வத் துவத்தின் பரிபூரணமெல்லாம், சரீர பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது". (கொலோ.2:9) தேவ ஆவியானவர் மிகப் பெரிய நீர்த்தேக்கமாயிருந்து அங்கிருந்து புறப்படும் குழாய்கள் வாய்க்கால்கள் மூலம் நம்மில் அவரது நிறைவு பாய்ந்து வருகிறது. "அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின் மேல் கிருபை பெற்றோம். எப்படியெனில் நியாயப் பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின". (யோவா.1:16,17) மற்ற எல்லா அமைப்புகளும் நமக்கு அபிப்பிராயங்களையும், கட்டளைகளையும், சட்டங்களையும் மட்டுமே தந்தது. ஆனால் கிறிஸ்து அவற்றை உணருவதற்கான வல்லமையைத் தருவதோடு அவரே நமது உள்ளத்தில் வாழுகிறார். அவர் தான் மகா பெரிய விசேஷித்த மனிதன். ஆனால் அவர் மாதிரிக்கும் மேலானவர். அவர் ஜீவனுள்ள தலைவரும் வாழ்வின் மூதன்மையுமாவார். அவர் தம்முடைய வல்லமையால் நம்மில் பெருகி, தூய ஆவியின் உதவியால் நம்மை போஷித்து நம்மை பெலப்படுத்துகிறார்.

கிறிஸ்து நமது வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் உண்மையான நிறைவானவர்: நாம் அனைத்துப் பகுதிகளிலும் நிரப்பப் பட்டால் மட்டுமே நிரப்பப்பட்டவர்களாக முடியும். கிறிஸ்து இதையே நமது முழுமையான இரட்சிப்பில் எதிர்பார்க்கிறார்.

அவர் நமது இரட்சிப்பின் எல்லா தேவைகளையும் நமது மீட்போடு தொடர்புடைய எல்லா நிபந்தனைகளையும், நல்மனம் பொருந்துதலையும், நியாயத் தீர்ப்பையும் நிரப்புகிறவர்: அவர் நமக்கு எதிரான குற்றச்சாட்டுகளை, தமது சொந்த விலையேறப் பெற்ற நிவாரணத்தால் நிரப்புகிறார். தமது சொந்த இரத்தத்தால், '**எல்லாக் காலங்களுக்கும் தீர்க்து வைக்கப்பட்டது**' என்று எழுதி விடுகிறார். அவர் உடைந்த சட்டங்களையும், நமது தோல்விகளையும், மீறுதல்களையும் எடுத்துவிட்டு, தமது பரிபூரண நீதியால் நிரப்பி எல்லாவற்றிற்கும் மேலாக "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப் பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்". ரோ. 10:4 என்று எழுதுகிறார். அதோடு "தமக்கு சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்". (எபேசி.1:6) "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2கொரி.5:21)

எனவே நாம் கொலோ.2:10ன்படி, "அவருக்குள் நாம் பரிபூரணமாயிருக்கிறோம்". "ஏனெனில் பரிசுத்தப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" (எபி.10:14) நாம் பாவமே ஒரு போதும் செய்யாதவர்கள் போல முழுவதும் இரட்சிக்கப்பட்டு விடுகிறோம்.

மிக முக்கியமான காரியம் என்னவெனில் இது முழுமையானது என்று உணர வேண்டும். முழுமையின் குறைவு சந்தேகத்தாலும் கட்டுப்படுத்துதல்களாலும் ஏற்படுகிறது. நமது மீட்புக்கான கிறிஸ்துவின் பணி முடிந்து விட்டது. அதை ஏற்றுக் கொள்ளும் போது அது முழுமையானதும் நித்தியமானதுமான இரட்சிப்பாகிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

வாசகர் கவனத்திற்கு

வங்கி வழியாக காணிக்கை அனுப்புகிற வாசகர்கள் தகவல் தராவிட்டால், வாசகர் பெயர் எங்களுக்கு தெரியாதபடியால், ரசீது அனுப்ப இயலாது, பத்திரிக்கையும் அனுப்ப இயலாது.

உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்

Mobile : **95432 21008**

Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

"யாக்கோபு என்னும் பூச்சியே, இஸ்ரவேலின் சிறுகூட்டமே, பயப்படாதே; நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று கர்த்தரும் இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய உன் மீட்பர் உரைக்கிறார்". ஏசாயா 41:14

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2024 ஏப்ரல் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், 'வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்' துதிக்கிறேன்.

ஜனவரி மாத ஆசிரியர் கடிதத்தில் இவ்வாறு எழுதியிருந்தேன்:

புதிய முகவரி பட்டியல்

வருகையின் தூதன் பத்திரிகை அனுப்புவதற்காக புதிய முகவரி பட்டியல் தயாரித்து வருகிறேன். தேவனுடைய பிள்ளைகள் . . . .

மாதந்தோறும் தாங்கும்படி தயவாய் கேட்கிறேன்.
சிறப்பு காணிக்கைகள் அனுப்பி உதவுங்கள்.
ஆண்டு காணிக்கை அனுப்புகிறவர்கள் குறைந்த பட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்

ஆயினும் வாசகரில் அநேகர் வழக்கம் போல மணியாடர் வழியாகவும், வங்கி மூலமாகவும் **ஆண்டு காணிக்கை** ரூபாய் 100 அல்லது 200 அனுப்பியிருக்கிறீர்கள். யாக்கோபு 4:15 ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், **உங்களுக்கு இந்த ஆண்டு இறுதி வரை பத்திரிகை வரும்.**

சகோதரன் **R. ஸ்டான்லி** (BYM) அவர்கள் எழுதிய ஒரு சவாலான செய்தியை, அவர்களுடைய தமிழ் மொழி பெயர்ப்பின்படியே அச்சிடுகிறேன். அந்த கட்டுரையில் ஜெபத்தைப் பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்:

வீடு முழுவதும் நாட்காட்டிகளையும் வசனங்களையும் தொங்கவிடுவதற்குப் பதிலாக உலகப்படம் **(குறைந்த பட்சம் இந்திய வரைபடம் – ஆசிரியர்)** ஒன்றை மாட்டுங்கள். நற்செய்தி எட்டியிராத பகுதிகளுக்கு வண்ணமிடுங்கள். இந்தப் படத்திற்கு முன்பாக நின்று பார்க்கும் போது, ஆண்டவர் உங்கள் இருதயத்தில் ஒரு பாரத்தைத் தீக்கொளுத்திடுவார். அதுதானே வில்லியம் கேரிக்கு (1761-1834) நடந்தது!

ஜெபிக்கிறவன் கொடுக்கிறவனாகவும் இருப்பான் என்பதை நிரூபிக்கும் வகையில் அவர் இவ்வாறு எழுதியிருக்கிறார்:

பல ஆண்டுகளுக்கு முன் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் பயிற்சி முகாமொன்று நடத்தினோம். இந்த நிகழ்ச்சியில் நான் முக்கிய செய்தியாளனாயிருந்தேன். நிகழ்ச்சியின் மூன்றாம் நாள்வரை, செலவுகளுக்கான, போதுமான பணமில்லை. மூன்றாம் நாள் காலையில் பயிற்சியறைக்குள் செல்லும் வழியில் ஜெபித்துக் கொண்டே போனேன். "நான் வைத்திருப்பவைகளைக் கொடுத்து விடும்வரை வேறு யாராவது கொடுக்கமாட்டார்களா என்று எதிர்பார்ப்பது நியாயமற்றது" என்ற ஜார்ஜ் முல்லரின் (1805-1898) வார்த்தைகள் எனது நினைவுக்கு வந்தன.

மீதியான செய்தியை கீழே அச்சிடப்பட்டுள்ள கட்டுரையில் படியுங்கள். தேவ ஆவியானவர் உங்களோடு பேசுவாராக.

உதவி : **94897 40295**
அலுவலகம் : **95432 21008**

உங்கள் அன்பு சகோதரன்
வெஸ்லி தேவதாசன்

2024 கர்த்தருக்கு முன்பாக உண்மையும் உத்தமுமாய் நடக்கும் ஆண்டு
I have walked before thee in truth and with a perfect heart. Isa.38:3

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

மன்றாட்டு வீரர் ஆவது எப்படி?

பாடுதல், ஆராதனை நடத்துதல், பிரசங்கித்தல் போன்ற அனைத்துக் காரியங்களுக்கும் போட்டி ஏராளம்; தனிமையில் மன்றாடி ஜெபிப்பதற்கோ? அதற்கு எப்பொழுதுமே தட்டுப்பாடுதான். (ஏசா.59:16)

ஜெபம் என்ற பொதுவான பயிற்சியில் "மன்றாட்டு" எங்கு வருகிறதென்று கவனிப்போம். 1 தீமோ.2:1 ஜெபத்தின் நான்கு பகுதிகளைக் குறிப்பிடுகிறது **"விண்ணப்பங்கள், ஜெபங்கள், மன்றாட்டுகள் (வேண்டுதல்கள்) ஸ்தோத்திரங்கள்"**. இப்பட்டியல் **"விண்ணப்பங்களில்"** துவங்குகிறது. நமது தேவைகளைச் சமர்ப்பிப்பதை இது குறிக்கும். அடுத்துவரும் **"ஜெபங்கள்"** என்பது ஆண்டவரின் உதவியை நாடுவதாகும். **"மன்றாட்டுகள்"** அல்லது **"வேண்டுதல்கள்"** என்பது மூன்றாவது படியாகும். அது நமது தேவைகளைச் சமர்ப்பிப்பதற்கும், அதற்காய்த் தேவனது உதவியை நாடுவதற்கும் அடுத்த உயர்மட்டத்திலுள்ளது. இது ஏறத்தாழ ஒரு வக்கீல் வாதாடுவதற்குச் சமமானது. அடுத்து இறுதியாக வருவது **"ஸ்தோத்திரங்கள்"**- அதாவது நன்றி செலுத்திப் பதிலைப் பெற்றுக் கொள்ளுதல். அப்படியானால், பொதுவாக ஜெபம் என்று நாம் குறிப்பிடுவதில், தேவனிடமிருந்து பதிலைப் பெற்றுக் கொள்வதற்கு முந்திய உயர்ந்தபடி **"மன்றாடுதலே!"** மன்றாட்டு ஜெபத்திற்கு அவசியமான ஏழு உட்கூறுகளை இங்கு விளக்குகிறேன்.

1. தகவல்கள் (Information)

தகவல்களைப் பெறுவதிலேயே மன்றாட்டு துவங்குகிறது. நெகேமியா எவ்விதம் தகவல்களைச் சேகரித்தான் பாருங்கள்: நெகே.1:2-4, **"என் சகோதரரில் ஒருவனாகிய அனானியும் சில மனிதரும் யூதாவிலிருந்து வந்தார்கள்... யூதர்களைப் பற்றியும் எருசலேமைப் பற்றியும் அவர்களிடம் விசாரித்தேன். அதற்கு அவர்கள்: அடிமைத்தனத்திற்குத் தப்பித்தவர்கள்... பெருந் துயரும் சிறுமையும் அடைகிறார்கள். எருசலேமின் மதில்கள் தகர்த்தெறியப்பட்டுள்ளன; அதின் வாயில்கதவுகள் தீக்கிரையாகி விட்டன என்றனர். இதைக் கேட்டதும், நான் உட்கார்ந்து அழ ஆரம்பித்தேன்; பல நாட்கள் துக்கம் கொண்டாடினேன்; மேலும் நான் உபவாசமிருந்து விண்ணகக் கடவுளின் முன் மன்றாடினேன்"**. தகவல்கள்தான் நெகேமியாவை அழுகையுடன் மன்றாட வைத்தன. அவன் **"விசாரித்தான்"** என்று வாசிக்கிறோம். நீங்களும் மன்றாட்டு வீரராக வேண்டுமானால், உங்கள் கண்களைத் திறந்து வைத்துக் கொண்டு, உலகிலுள்ள சபையையும், சபையைச் சுற்றியுள்ள உலகையும் குறித்த தகவல்களை முடிந்த அளவு சேகரிக்க வேண்டும். **ரூத் பில்லி கிரஹாம்** (1920-2007) அம்மையார் மன்றாட்டு ஜெபத்தில் தேறியிருந்தார்கள். மன்றாட்டு ஜெபத்திற்காக அவர்கள் பயன்படுத்தும் கையேடு எதுவென்று அவர்களிடம் கேட்கப் பட்டபோது, வந்த உடனடிப் பதில்: **"தினசரி செய்தித் தாள்!"** இறைவன் படைத்த இவ்வுலகில் என்ன நடக்கிறதென்று நமக்குச் சொல்லுவது செய்தித் தாள்கள் தானே? இவ்வுலகில்

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியூபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab **N**ational **B**ank, Nagercoil -1. IFSC Code : **PUNB**0213120

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA**0000063

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara **B**ank, Ngl-1 IFSC Code : **CNRB**0001110

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றுவித மனிதர் உண்டாம்: காரியங்களை நடத்துபவர்கள்; நடக்கும் காரியங்களைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள்; என்ன நடக்கிறதென்றே தெரியாதவர்கள். நம்மில் பெரும் பாலானோர் இந்த மூன்றாம் வகுப்பைச் சேர்ந்தவர்கள் தான்.

மிஷனரிப் பத்திரிகைகளையும் முடிந்த அளவு சேகரிக்க வேண்டும். ஆண்டவர் எத்தனையோ மிஷனரி இயக்கங்களை எழுப்பியுள்ளார். சற்றும் சந்திக்கப்படாத மக்களினங்கள், அங்குள்ள பிரச்சனைகள் போன்றவை குறித்த நேரடித் தகவல்களை இவ்வியக்கங்கள் சேகரிக்கின்றன. இத்தகவல்களைத் தங்கள் பத்திரிகைகளில் வெளியிடுகின்றன. **சுகமளிப்பு ஊழியப் பத்திரிகை ஒன்றை வாசித்தால் மிஷனரிப் பத்திரிகைகள் குறைந்தது பத்தாவது வாசிக்க வேண்டும் என்று சொல்லுவேன். அதுதான் உங்களைச் சமரிலைப் படுத்தும்!** "நமது" தலைவலி, இடுப்புவலி, கால்வலியைப் பற்றித்தான் நமக்குக் கவலை; "**இறைவனது**" இதய வேதனையை உணருவது யாரோ? அவரது உள்ளத்தை உடைக்கும் எதுவும் நமது உள்ளங்களையும் உடைக்கட்டும்!

எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் மிஷனரிக் கன்வென்ஷன்களில் பங்கு பெறுங்கள். உங்கள் தனிவாழ்வில் விடுதலையும் புத்துணர்வும் நாடி முகாம்களுக்கும் கருத்தரங்குகளுக்கும் செல்வதுநல்லதுதான். ஆனால் எத்தனை காலம்தான் "**நமது**" ஆசீர்வாதங்களையே நாடியலைவோம்? நமது உடனடித் தேவைகளை விட்டு, நமது கண்களை ஏறெடுத்துத் தொலைவிடங்களை நோக்குவோம் (யோ.4:35) மிஷனரிக் கன்வென்ஷன்களில்தான் மிஷனரிகளையும் மிஷனரித் தலைவர்களையும் சந்திக்கும் வாய்ப்பு உங்களுக்குக் கிட்டும்.

கடைகளுக்குப் போவதிலும், இனத்தார் நண்பர்களைச் சந்திப்பதிலேயுமே உங்கள் விடுமுறைக் காலங்களைக் கழித்து விடாதீர்கள். புதிய பணித்தளம் ஒன்றிற்குச் சென்று அங்குள்ள மிஷனரிகளுடன் சில நாள் தங்கியிருங்கள். அப்பொழுதுதான் அவர்களது பிரச்சனைகளையும் தடுமாற்றங்களையும் நேரடியாய் நீங்கள் அறிந்து கொள்ள முடியும். சில ஆதிவாசியினரிடையே உட்புகுவது எவ்வளவு கடினம் என்று உணருவீர்கள். ஒரு சில வார்த்தைகளுக்குச் சமமான சொற்களை ஆதிவாசி மொழிகளில் கண்டுபிடிக்க, அப்பப்பா, வேதாகம மொழி பெயர்ப்பாளர்கள் எவ்வளவாய்த் திண்டாடுகிறார்கள் என்றெல்லாம் அறிந்து கொள்ள இவர்களோடு தங்கியிருந்து பாருங்கள். அப்பொழுதுதான் **ஒரு ஞாலும் பகட்டு மேடைகளுக்கு வராத வேத மொழி பெயர்ப்பாளர்களுக்காய்க் கருக்காய் மன்றாடும்படி உங்கள் முழங்கால்கள் விரையும்.** எனது கல்லூரி நாட்களிலும், பொறியாளராய்ப் பணியாற்றிய போதும், மிஷனரிப் பணித் தளங்களுக்குச் சென்று வருவேன். இவ்விதம் நேரடியாய்ச் சென்று நான் "**பார்க்கது தான்**" என்னை மன்றாட்டு ஜெபத்திற்கு நடத்தியது. இயேசு வானவர் எங்கும் நடந்து திரிந்து பிரசங்கித்தும் மக்களைக் குணமாக்கியும் வந்தார். ஆனால் திரளான மக்களைக் "**கண்டபோதோ**" அவர் "**மனதுருகினார்**" என்று வாசிக்கிறோம். (மத்.9:35,36) ஏற்கெனவே அவர் மனதுருக்கமுள்ளவர்தானே? ஆனால் நிலையை நேரில் பார்த்தபோது அது அவரை இன்னும் உலுக்கி உருக்கிற்று. பார்ப்பது பார்ப்பதுதான்!

வீடு முழுவதும் நாட்காட்டிகளையும் வசனங்களையும் தொங்கவிடுவதற்குப் பதிலாக உலகப்படம் ஒன்றை மாட்டுங்கள். நற்செய்தி எட்டியிராத பகுதிகளுக்கு வண்ணமிடுங்கள். இந்தப் படத்திற்கு முன்பாக நின்று பார்க்கும் போது, ஆண்டவர் உங்கள் இருதயத்தில் ஒரு பாரத்தைத் தீக்கொளுத் திடுவார். அதுதானே **வில்லியம் கேரி**க்கு (1761-1834) நடந்தது! செருப்புத் தொழிலாளியாயிருந்த அவர் தனது தொழிலறையில் ஓர் உலகப் படத்தை ஒட்டி வைத்திருந்தார். அடிக்கடி அந்த படத்தின் முன் நின்று கொண்டு, சுந்திக்கப்படாத நாடுகளின் மீது விரலை வைத்து ஜெபிப்பாராம். நடந்ததென்ன? மேற்கு வங்காளம் வந்து சேர்ந்தார். இந்திய மொழிகள் பலவற்றில் பாண்டித்தியம் பெற்றார். ஏதோவொரு விதத்தில் **விவிலியத்தை 40 இற்கிய மொழிகளில்** மொழியாக்கம் செய்வதில் ஈடுபாடு கொண்டிருந்தார். நம்பமுடிகிறதா?

2. வெளிப்பாடுகள் (Illumination)

இது பிரதானமாகத் திருவசனத்திலிருந்து வருகிறது. திருமறையைத் திரும்பத் திரும்ப வாசிப்பதின் மூலம் திருமனம் உங்களுக்குப் புலனாகிறது. தானியேல் பெரியதொரு தீர்க்கனாகவும் மன்றாட்டு வீரனாகவுமாயிருந்தான். அவனது சாட்சியைக் கேளுங்கள்: தானியேல் 9:2,3 "தானியேலாகிய நான் எருசலேம் பாழ்நிலையில் கிடக்கும் காலம், தீர்க்கன் எரேமியாவிற்கு ஆண்டவர் உரைத்தபடி, எழுபது ஆண்டுகள் ஆகும் என்று நூல்களிலிருந்து படித்தறிந்தேன். அப்பொழுது நான் உபவாசமிருந்து, சாக்கு உடையணிந்து, சாம்பலில் அமர்ந்து, என் ஆண்டவராகிய கடவுளிடம் திரும்பி மன்றாடி வேண்டிக் கொண்டேன்". எரேமியா தீர்க்கதரிசன நூலைத் தானியேல் வாசித்தபோது அது அவனை முழங்கால்களுக்குத் துரத்திற்று.

இன்று நம்மை இவ்விதம் முழங்காலிட்டு மன்றாட உந்துவதற்கான திருவசனங்கள் உண்டா? ஆம், எடுத்துக் காட்டாக, யோவேல் முன்னுரைத்தது: "**கடைசி நாட்களில் மானிடராகிய யாவர்மீதும் என் ஆவியை ஊற்றுவேன்**". (யோவே.2:28) இவ்வசனத்தைப் பெந்தெகொஸ்தேயன்று பேதுரு எடுத்துச் சொன்னான். பிரிய மானவர்களே, "**கடைசி நாட்கள்**" எப்பொழுது துவங்கிற்று தெரியுமா? இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் அல்ல! இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையிலேயே அது துவங்கிற்று. (எபி.1:1,2) அப்படியானால், நாம் இன்றிருப்பது கடைசி "**நாட்கள்**" அல்ல, கடைசி "**நிமிடங்கள்!**" 120 பேர் அருள்மாரியில் நனைந்த போது, பேதுரு உடனே, இது தான் அது என்று சொல்ல முடிந்தது. (அப்.2:16) இன்றும் நாம் இவ்விதம் வாக்குகளைப் பிடித்து கொண்டு மன்றாட்டில் இறங்க முடியுமா? நிச்சயம்! பரிசுத்த ஆவியான வரைப் பற்றிய சரியான அறிவில்லாத கிறிஸ்தவர்கள் எத்தனை எத்தனை? இவர்கள் தங்கள் வாழ்க்கையில் அவரது வல்லமையை ருசிக்கவேயில்லை. இன்னும் பலர், பரிசுத்த ஆவி என்ற பெயரில், வஞ்சக ஆவிகளின் வலைகளுக்குள் சிக்கியிருக்கின்றனர். இவையெல்லாம் நம்மை முழங்காலிடச் செய்ய வேண்டுமே! "எல்லாச் சபைகளுக்குள்ளும் உமது ஆவியானவர் வல்லமையாய் வீசுவாராக!" என்று கதறுவோம்!

இயேசுவானவர் தமது ஆலயத்தை வியாபாரமயமாக்கிக் கொண்டிருந்தவர்களை "அடித்துத்" துரத்தினார் என்று அடிக்கடி சொல்லுகிறோம். ஆனால் அவர்களை "அடிக்கும்" முன்னர் அவர்களுக்காய் "**அழுதார்**" என்பதை நாமறிவோமா? எவர் ஒருவருக்காகவும் நீங்கள் மண்டியிட்டுக் "**கதறும்வரை**" அவரைக் "**கண்டனம்**" செய்வதற்கு உங்களுக்கு உரிமையில்லை. மற்றபடி, அது வெறும் குறை காணலாகிவிடும்.

நம்மை மன்றாட்டிற்குள் நடத்தக் கூடிய இன்னொரு வேதப்பகுதி 1தீமோ.4:1-3 ஆகும். இறுதிக் காலத்தைக் குறித்துப் பவுல் தனது இதயத்தைக் கொட்டுகிறான். "ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி.... சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டுவிலகிப் போவார்கள்". அப்படியே, 2 தீமோ.4:3,4 "அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல்... தங்கள் சொந்த விருப்பங்களுக்கேற்பப் போதகர்களைத் தங்களுக்குத் திரளாய்ச் சேர்த்துக் கொள்வார்கள்". இந்த நாட்கள் ஏற்கெனவே வந்துவிட்டன அல்லவா? ஆரோக்கிய உபதேசிகளை விடக் கள்ளப் போதகர்கள் தானே அதிகம்! ஆரோக்கிய உபதேசம் பேசாத பிரசங்கிகளைத் "திரளாய்க்" குவித்துக் கொள்வார்களாம். எனவேதான், கள்ளத் தீர்க்கர்களைக் குறிப்பிடும் போது, பொதுவாக, ஆண்டவர் "அநேக" என்ற சொல்லைச் சேர்த்துக் கொள்வார்; அப்போஸ்தலன் யோவானும் இவ்விதமே குறிப்பிட்டான். (மத்.24:11,24; 1 யோ.4:1) மக்கள் நொறுக்குத் தீனியைத்தான் நாடுகிறார்கள். பலமான ஆகாரத்திற்குக் கிராக்கியில்லையே! (எபி.5:13,14) தங்களுக்கு "**தேவையான தை**" அல்ல, தங்களுக்கு "**விருப்பமானதையே**" பிரசங்கிப்போரே மக்களுக்குப் பிரியம். முதல் நூற்றாண்டிலேயே இது முன்னறிவிக்கப்பட்டுவிட்டது. இவ்விதமுன்னறிவிப்புகளையெல்லாம் எடுத்துக் கொண்டு ஆண்டவர் முன் மண்டியிட்டுக் கதற வேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு ஓர் எச்சரிப்பையும் விடுக்க விரும்புகிறேன். மன்றாட்டு ஜெபப் பணியில் ஈடுபடுவோர் போதுமான அளவு திருமறைத் தியானத்தில் நேரம் செலவிடாவிட்டால் அவர்கள் திசை மாறுவது திண்ணம். 10 நாள் 40 நாள் உபவாசமென்று இருந்துவிட்டு வரும் ஊழியர் பலர் வினோதமான வெளிப் பாடுகள், போதனைகளுடன் வெளி வருவதேன்? தங்களுடைய உபவாச ஜெபத்தையும் திருமறைத் தியானத்தை யும் அவர்கள் சமநிலைப்படுத்தவில்லை. எரேமியாவின் புத்தகத்தில் "வாசித் ததின்படியே" தானியேல் மன்றாடி ஜெபித்தான். நமது காலங்களைக் குறித்த முன்னறிவிப்புகளை வைத்தே நாம் மன்றாட வேண்டும். (மத்.24)

கூடியமட்டும், முழங்காலிலேயே வேதத்தைத் தியானிக்கப் புது விசுவாசி களை நான் ஊக்குவிக்கிறேன். நீங்கள் முழங்காலில் திருவசனத்தைத் தியானிக் கும் போது கிடைக்கும் வெளிப்பாடு களைப் போல் புனித மன்றாட்டுப் பணிக்குள் உங்களை ஆழமாய்த் தள்ளக் கூடியது வேறெதுவுமில்லை.

3. அகத்தூண்டல் (Inspiration)

பரிசுத்த ஆவியானவர் மூலம் நமக்குண்டாகும் அகத்தூண்டலே மன்றாட்டை வளம்பெறச் செய்யும் மூன்றாவது காரியம். "வெளிப்பாடு" திரு வசனத்திலிருந்து கிடைக்கிறது; "அகத் தூண்டல்" ஆவியானவரால் அருளப் படுகிறது. இதைத்தான் பழம் தீர்க்கர்கள் தங்கள்மீது வந்த "கர்த்தரது பாரம்" என்றழைத்தனர்.(நாகூம் 1:1; ஆப.1:1; மல்.1:1) சகரியா 12:10-ல் காண்கிறது போல், ஆவியானவர் மன்றாட்டின் ஆவியாயிருக்கிறார்; "நான் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவி யையும் ஊற்றுவேன்!" இதன் விளைவு 13:1,2-ல் வர்ணிக்கப்பட்டுள்ளது; "அந்நாளிலே நான் விக்கிரகங்களின் பேரும் நாட்டில் இராதபடி அழிப்பேன்". "தேவா, எங்கள் நாட்டில் இதைச் செய்யமாட்டீரா"?

இவ்விதமான அகத்தூண்டல் பெற்ற இரு தீர்க்கர்களை இங்கு குறிப்பிடுகிறேன். தீர்க்கன் **எரேமியா** சொன்னது: எரேமி.23:9,10, "தீர்க்கர் களைக் குறித்து என்னுள் என் இதயம் நொறுங்கியுள்ளது; என் எலும்புகளெல் லாம் நடுநடுங்குகின்றன; ஆண்டவரை முன்னிட்டும் அவரது பரிசுத்த வார்த் தைகளை முன்னிட்டும் நான் மது பானத்தினால் வெறித்திருப்பவன் போலானேன்". தீர்க்கன் **எசேக்கியேலின்** அனுபவமும் இப்படிப்பட்டதே: எசேக்.37:1, கர்த்தரின் கை என்மேல் அமர்ந்து, "கர்த்தர் என்னை ஆவிக்குள்ளாக்கி வெளியே கொண்டு போய், எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவில் நிறுத்தினார்".

நம்மெல்லாருக்கும் பலவித பலவீனங்கள் உண்டு; ஆனால் மிக மோசமான பலவீனம் மன்றாட்டு ஜெபக்கில் தான்.

நண்பரே, ஏதோவொரு காரியத்திற் காக நீங்கள் ஜெபித்துக் கொண்டிருக் கையில் திடீரென்று முற்றிலும் வித்தி யாசமான ஒரு குறிப்பிற்காய் மன்றாடும் படி தூய ஆவியானவர் உங்களைத் திருப்புகிறாரா? இப்படிப்பட்ட வேளைகளில் தளர்த்திக் கொடுத்து இசைந்து விடுங்கள். ஏனெனில், எங்கோ இக்கட்டில் இருக்கும் ஒரு நபருக்கோ, கேடான ஒரு சூழ்நிலைக் கோ அந்த வேளையில் ஜெபிக்கும் ஒரே நபர் நீங்களாகவே இருக்கலாம். தீர்க்கர்களையும் போதகர்களையும் உள்ளடக்கியிருந்த அந்தியோகியா சபை எந்தவொரு நிகழ்ச்சிக்காகவும் அல்ல, வெறுமனே கர்த்தரைத் தொழுது கொண்டிருந்தது. திடீரென்று, ஆவி யானவர் "பவுலையும், பர்னபாவையும் நான் அழைத்த ஊழியத்திற்காய்ப் பிரித்து விடுங்கள்" என்றார். (அப்.13:1-4) அப்பொழுதுதான், அங்கிருந்துதான், முதல் மிஷனரிக்குழு புறப்பட்டுச் சென்றது. அந்தியோகியா சபைத்தலை வர்கள் தங்களுக்குக் கிடைத்த அகத் தூண்டலுக்குக் கீழ்ப்படிந்ததாலேயே இந்த ஆசீர்வாதம்!

ஆவியானவரைவிடச் சிறந்த மன்றாட்டு வீரர் எவருமில்லை. நமது **"பெலவீனங்களில்"** அவர் நமக்கு உதவுகிறாராம். நம்மெல்லாருக்கும் பலவித பலவீனங்கள் உண்டு; ஆனால் மிக மோசமான பலவீனம் மன்றாட்டு ஜெபத்தில் தான். ரோம.8:26, "ஆவியானவர் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். ஏனெனில், நாம் இன்னபடி வேண்டிக் கொள்ள வேண்டுமென்று அறியா திருக்கிறபடியால் ஆவியானவர் தாமே சொல்ல முடியாத பெருமூச்சுகளோடு நமக்காக விண்ணப்பம் பண்ணுகிறார்". இது நம்மையன்றி அல்ல; நம்மூலமாக! **நமக்கு முச்சுப் பிடித்துப் பாடத் தெரியும்; ஜெபக்தில் பெருமூச்சுவிடத் தெரியுமா?**

நாங்கள் ஒரு சில கல்லூரி மாண வராக 1966-ல் ஒரு சனியன்று மதியம் உபவாசித்து ஜெபித்துக் கொண் டிருந்தது என் நினைவுக்கு வருகிறது. ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்காக அல்ல; பொதுவாக எழுப்புதலுக்காகவும், நற்செய்திப் பணிக்காகவும் ஜெபித்துக் கொண்டிருந்தோம். எங்களோடு முழங் காலிட்டிருந்த ஒரு பேராசிரியருக்கு ஆப்பிரிக்க வனவாசிகளை ஆவியானவர் ஒரு படம் போல் காட்டி உணர்த்தி னார். உடனே அவர் தனது விரல்களி லிருந்த கனமான இரண்டு மோதிரங் களைக் கழற்றி என்னிடம் கொடுத்து, **"நமது ஆப்பிரிக்கப் பணிக்காய் இதைச் செல விடுங்கள்"** என்று கண்ணீருடன் கூறினார். அப்படியே அதிர்ந்து போனேன்! ஒரு மணிநேரம் ஆப்பிரிக்க நாட்டு மக்களுக் காய் ஆவியின் ஒத்தாசையோடு மன்றாடி ஜெபித்தோம். ஏறத்தாழ 25 ஆண்டுகள் கழித்து, ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் மூலம் (BYM) கர்நாடக மாநிலத்திற்குச் சில மிஷனரி களை அனுப்பிய போது காடுகளுக்குள் மறைந்து வாழ்ந்து வந்த சில ஆப்பிரிக்க இனத்தவரைச் சந்தித்தனர். இவர்கள் அடிமைகளாக பல்லாண்டுகளுக்குமுன் இந்தியாவிற்கு வந்தவர்களாம். இன்று இந்த இனத்தவரிடையே நமக்குப் பல சபைகள் உண்டு!

மிஷனரிப் பணியின் பிரதான அதிகாரி தூயஆவியானவரே. அவரது உந்துதல்கள், அவர்தரும் பாரங்கள், அவரது மெல்லிய சத்தங்கள், அகத்தூண்டல்கள் போன்றவற்றை யெல்லாம் அசட்டை செய்யக் கூடாது. இவைகளின் வாயிலாகவே தமது பாரத்தை நமக்குத் தருகிறார். வெளிப் படுத்துதல் 2,3 ஆகிய அத்தியாயங்களி லுள்ள ஏழு கடிதங்களையும் எழுதும் படிச் சொல்லி அனுப்பியது **"இயேசு வானவர்"**; ஆனால் ஒவ்வொன்றின் முடிவிலும் **"ஆவியானவர்"** சபைகளுக்குச் சொல்லு கிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றிருப்பதைக் கவனித்தீர்களா?

4. கற்பனை (Imagination)

இதை அடைகாத்தல் (Incubation) என்றும் பொருள்படுத்தலாம். தேவன் வாக்கருளியிருப்பவைகளைக் குறித்த நமது தரிசனத்தை நாம் கற்பனை செய்வதின் மூலம் விரிவடையச் செய்ய வேண்டும். இவ்விதம் கற்பனை செய்வது கண்டதையும் நினைப்பதல்ல; மாறாக, அது திருவசன வரம்பிற்குள் ளான சிந்தனை. நமது மனதில் கற்பனைச் சித்திரங்களை நாம் வரையும் போது, நமது இதயங்களில் தேவன் ஊன்றும் பாரங்கள் அடைகாக்கப் படுகின்றன. அக்காலத்து மார்க்க வுலகின் தலைநகரான எருசலேமில் வல்லமையாய்ப் பயன்படுத்தப்பட்ட பவுலை எடுத்துக் கொள்ளுங்கள். அக்காலத்து அரசியல் உலகின் தலை நகரான ரோம் நகருக்குச் செல்ல வேண்டுமென்று அவனுக்குத் தீராத ஆசை. அவன் அங்கு போவான் என்று ஆண்டவர் அவனுக்குச் சொல்லியிருந் தார். (அப்.23:11). எனவே, அந்த நகருக்குச் சென்று தனது செய்தியை இடியாய் முழங்க போகும் நாளைக் குறித்து அவன் கற்பனை செய்து கொண் டிருந்தான். அவனது கற்பனை அவனை மன்றாட்டு ஜெபத்திற்குள் நடத்திற்று. இதைக் குறித்து ரோம.1:12-ல் அவன் எழுதியது: "எவ்விதத்தினாலாவது நான் உங்களிடம் வருகிறதற்கு தேவ சித்தத் தினாலே எனக்கு நல்ல பிரயாணம் சீக்கிரம் கிடைக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்". "எவ்விதத் தினாலாவது... சீக்கிரம்" என்ற பதங்கள் தான் வளர்ந்து வந்த அவனது கற்பனையைக் குறிப்பிடுகின்றன.

பவுல் ஜெபித்தது மட்டுமல்ல, ரோம் நகர் விசுவாசிகளையும் அவன் எப்படி யாவது அங்கு வந்துவிட வேண்டு மென்று ஜெபங்களில் அவனோடு **"போராட வேண்டுமென்று"** வேண்டிக் கொண்டான். (ரோம.15:30-32) **"போராடி"** வேண்டுவதைத்தான் மன்றாட்டு என்கிறோம். ஆண்டவர் உங்கள் இருதயத்தில் ஒரு விதையை ஊன்றும் போது, வெறுமனே புய பலத்தால்

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அதை நிறைவேற்றிவிட முயலாமல், அவரது பிரசன்னத்தில் உங்களை ஊற்றி மன்றாடவும், கற்பனையை அதின் மூலம் விசுவாசத்தோடு வளர்த்துக் கொள்ளவும் கற்றுக் கொள்ளுங்கள். பரிசுத்தமான கற்பனைகள் நம்மில் பெருகுமானால் கீழ்த்தரமான சிந்தனை களுக்கு இடமில்லாது போகும்.

உங்கள் மனதில் நல்ல கற்பனை சித்திரங்களை வரைந்து பழகுங்கள். "இயேசுவே, நீர்தான் ஆண்டவர்" என்று, விரும்பியோ விரும்பாமலோ, நாவுகள் யாவும் அறிக்கையிடும் நாளைக் கற்பனை செய்து பாருங்கள். (பிலி.2:9-11) "நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும் போது அனைவரையும் என்பால் ஈர்த்துக் கொள்வேன்" என்ற இயேசுவின் வார்த்தைகளின் நிறை வேறுதலைக் கற்பனை செய்யுங்கள். (யோ.12:32) இரும்புத் துண்டுகளைக் காந்தம் இழுப்பது போன்று! கடற்கரைக்குச் செல்லும் போதெல்லாம், "சமுத்திரம் தண்ணீரினால் நிறைந்திருப்பது போல் பூவுலகு கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்துவிடப் போகிறது" என எண்ணிப் பாருங்கள். (ஏசா.11:9ஆ) கிராமந்தோறும் நகர்தோறும் திருச் சபைகள் நிறுவப்படுவதைக் கற்பனை செய்யுங்கள். நான் என் சபையைக் கட்டியே தீருவேன் என்பதல்லவா இயேசுவின் உறுதிமொழி! (மத்.16:18)

திருமறையின் வாக்குகள் மீது மட்டுமல்ல, திருச்சபைச் சரித்திரத்திலி ருந்தும் கற்பனைகளை உருவாக்கலாம். **சார்லஸ் பின்னியை** (1792-1875) ஆண்டவர் எழுப்புதலில் வல்லமையாய்ப் பயன் படுத்தினார். அந்நாட்களில் தொழி லாளர்கள் பல மணி நேரம் ஜெபக் கூடங்களிலேயே செலவிட விரும்பிய தால், தொழிற்கூடங்கள் கூட அடிக்கடி மூடப்பட்டனவாம். அவ்விதமே, **ஜான் வெஸ்லியின்** (1703-1791) எழுப்புதல் ஊழியத்தின் நாட்களில் மதுபானக் கடைகள் மூடப்பட்டன; திரையரங்கு களில் கூட்டமில்லை. இன்று நமது திரையரங்குகளுக்கு முன் வரிசை வரிசையாய் நிற்கும் திரள்களைப் பார்க்கும் போது, "தேவா, எங்கள் காலத்தில் இவ்வித வரிசைகள் இல்லாத நாட்கள் வராதா" என ஏங்குவோம். பின்னி மற்றும் வெஸ்லியின் மூலமாக தேவன் செய்தது போன்றவற்றை இன்று அவரால் செய்ய முடியாதா? இறுதிகாலத்தின் இறுதிக் கட்டத்தில் ஆவியின் அருள்மாரி இன்னும் கூடுதலாகத்தானே இருக்க வேண்டும்? வேல்ஸ் நாட்டு எழுப்புதலில் **ஈவான் ராபர்ட்ஸ்** (1878-1951) என்ற வாலிபன், "**ஆண்டவரே, சபையை வளைத்து சமுதாயத்தை ஆசீர்வதியும்**" என்று கதறினான். இன்று உங்கள் சபை வாலிபரைப் பார்க்கும் போது ஈவான் ராபர்ட்ஸ் போன்ற வாலிபரை அவர்கள் நடுவிலிருந்து தேவன் எழுப்பமாட்டாரா எனக் கனவு காணக்கூடாதா? பிரசங்கியாரான ஒரு நண்பர் எனக்கு ஒருமுறை இவ்விதம் எழுதினார்: "ஸ்டான்லி, **எழுப்புதலுக்காய் ஜெபிக்கிறீர்; எழுப்புதலுக்காய்ப் பிரசங்கிக்கிறீர்; எழுப்புதலுக்காய் உழைக்கிறீர்; எழுப்புதலைக் கனவு கண்டீரு;** எழுப்புதல் வந்தே தீரும்!" இதை நான் மறந்ததேயில்லை.

5. அடையாளப்படுத்தல் (Incarnation)

நாம் மன்றாடும் காரியம் நம்மை முழுவதும் ஆட்கொண்டு, நமது வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் பாதிப்பதே இவ்வனுபவமாகும். இதை "அடையாளப்படுத்திக் கொள்வதற் காய் அவதாரமெடுத்தல்" (Incarnational identification) என்றுகூட அழைக்கலாம். அதாவது எந்தப் பிரச்சனை அல்லது தேவைக்காய் மன்றாடுகிறோமோ அதோடு ஒன்றித்து விடுதலாகும்.

ஒரு மன்றாட்டு வீரனாக **மோசே** தேவனுக்குமுன் நின்று போராடியது நினைவிருக்கிறதா? "**ஆண்டவரே, ஒன்று மக்களை மன்னியும்; இல்லையேல் என்னை மரித்துவிடும்!**" (யாத்.32:32) கவலைக்கிடமான அந்தச் சூழ்நிலையோடு அவன் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டான். அவ்விதமே, இஸ்ரவேலர் அன்னிய மக்களோடு கலந்து விட்டதை அறிந்த **எஸ்றா** தனது தலைமயிரையும் தாடி மயிரையும் பிய்த்துக் கொண்டு, பித்து பிடித்தவன் போல் உட்கார்ந்து விட்டான். (எஸ்றா 9:1-3)

அரசனுடைய முழு நம்பிக்கைக்குப் பாத்திரமான பானபாத்திரக்காரனாய் **நெகேமியா** திகழ்ந்தான். அரசனுக்கு முன் அவன் துக்கமுகமாய் இருக்கவே கூடாது. ஒரு நாள் அரசன் அவனைப் பார்த்து, "நீ துக்கமுகமாய் இருப்ப தேன்?" என்று வினவிய போது, "எனது மூதாதையரின் நகர் பாழாக்கப்பட்டி ருப்பதைக் கேள்விப்பட்ட பிறகு நான் எப்படி மகிழ்ந்திருக்க முடியும்?" என்று பதிலுரைத்தான் (நெகே.2:1-3) அரச னுக்குமுன் தனது முகத்தில் துக்கத்தைக் காட்டிக் கொள்ளக் கூடாது என்று எவ்வளவோ முயன்றிருப்பான்! எப்படி முடியும்? இதுதான் அடையாளப் படுத்திக் கொள்ளுதல் என்பது.

"**என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீ ருற்றுமாய் இருக்கக் கூடாதா?... என் மக்களுக் காக இரவும் பகலும் அழுகிருப்பேனே**" என்று அங்கலாய்த்தான் **எரேமியா.** (எரே.9:1) எரேமியாவைப் போன்ற தீர்க்கர்களே இன்றையச் சபையின் தீராத தேவை. சிரித்தது போதும், சிணுங்க வேண்டிய காலமிது! ஜெப அறைகளிலேயே நம்மை அடைத்துக் கொண்டு **தானியேலைப்** போல, "**ஆண்டவரே, கேளும்! ஆண்டவரே, மன்னியும்! ஆண்டவரே கவனியும், செயலாற்றும்! இனியும் தாமதியாதேயும்!**" என்று கதற வோமா? (தானி.9:19) இவ்விதம் "என் பாவத்தையும், என் ஜனமாகிய இஸ்ர வேலின் பாவத்தையும்" அறிக்கையிட்டு விண்ணப்பித்து கொண்டிருந்தேன் என்கிறான் **தானியேல்**. (வச.20) தானியேலின் வாழ்க்கையில் அப்படி என்ன பாவம் இருந்தது? ஆனாலும், மக்களுடைய பாவங்களோடு தன்னை அடையாளப்படுத்திக்கொள்கையில் "**எனது பாவம்**" என்கிறான். **செய்யத் தகாததைச் செய்வது மக்களின் பாவமானால், செய்ய வேண்டியதைச் செய்யாதது தலைவர்களின் பாவமாகும்.**

இவ்விதம் மன்றாடுவதெல்லாம் பழைய ஏற்பாட்டுக் காலத்தையே சேர்ந்தது என்றிருக்கக் கூடாது. **பவுல்** என்ற புதிய ஏற்பாட்டு மோசே நமக்கு முன் இல்லையா? இதோ அவனது கதறல்: "சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே எனது இதயத்தின் வாஞ்சையும் தேவனை நோக்கிய ஜெபமுமாயிருக் கிறது". (ரோம.10:1) ஏதோவோர் ஆசீர்வாதம் வந்துவிடாதா என்ற நப்பாசையல்ல அது! அவன் தொடர்ந்து சொன்னது: "எனது சகோதரருக்காக நானே சபிக்கப்பட்டவனாகிவிடவும் விரும்புகிறேன்!" (ரோம.9:3) தான் சாபத்தை எடுத்துக் கொண்டால்தான் மக்கள்மீது ஆசீர்வாதம் இறங்கு மென்றால் அதற்கும் அவன் ஆயத்தம்! "இந்தத் தத்துவங்களையெல்லாம் எங்கே கற்றீர்?" என்று அவனிடம் கேட்டால், அவன் என்ன சொல்லுவான் தெரியுமா? "தத்துவமா, இல்லை இது முழங்காலில் கற்றது; மோசேயிட மிருந்து பெற்ற துடிப்பு இது!"

மன்றாட்டில் தேவனிடமிருந்தே ஏராளம் கற்கலாம். பின்வாங்கிய எப்பிராயீமைக் குறித்த தமது பாரத்தை அவர் எப்படி வெளிப்படுத்துகிறார் பாருங்கள்: "என் இருதயம் எனக்குள் குழம்புகிறது; என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகின்றன". (ஓசி.11:8,9) இதைத்தான் அடையாளப்படுத்திக் கொள்ளுதல் என்கிறோம்.

6. முயற்சியெடுத்தல் (Initiation)

மன்றாட்டு ஜெபம் என்பது தானாக வந்துவிடாது; அதற்காக நாம் சிரத்தை யெடுக்க வேண்டும். இறைமக்கள், அதிலும் குறிப்பாக இறைப்பணியாளர், மன்றாட்டுப் பணியில் தீவிரமாய் இறங்கிவிடாதபடி, கில்லாடியான பிசாசானவன் அவர்களை முக்கிய மானவை போல் தோன்றும் பல காரியங்களில் முடக்கி விடுவான். எல்லாமே "முக்கியமானது" போலத் தோன்றும்; ஆனால் எது "அவசியமா னது" என்பதை நாம்தான் கண்டு கொள்ள வேண்டும்.

உணவு பரிமாறும் காரியத்தில் ஆதிச்சபையில் ஏற்பட்ட சச்சரவு நமக்குத் தெரியும். இது உண்மை யாகவே ஒரு பிரச்சனைதான் எனினும், அப்போஸ்தலர்கள், "நாங்களே அதைக் கவனித்துக் கொள்ளுகிறோம்" என்று சொல்லி விடவில்லை. மாறாக, ஆவி யினால் நிறைந்திருந்த எழுவரை அதற்கென்று நியமனம் செய்ய வைத்து நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தினார்.

(6-ம் பக்கம் பார்க்க)

கடைகளுக்குப் போவதிலும், இனத்தார் நண்பர்களைச் சந்திப்பதிலேயுமே உங்கள் விடுமுறைக் காலங்களைக் கழித்து விடாதீர்கள். புதிய பணித்தளம் ஒன்றிற்குச் சென்று அங்குள்ள மிஷனரிகளுடன் சில நாள் தங்கியிருங்கள். அப்போதுதான் அவர்களது பிரச்சனைகளையும் தடுமாற்றங்களையும் நேரடியாய் நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

"நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும், திருவசனத்தைப் போதிப்பதிலும் தரித்திருப்போம்" என்றனர். (அப்.6:4) இதுதான் முயற்சியெடுத்தல் என்பது. நீங்கள் ஜெபிக்க ஜெபிக்க, மன்றாட்டில் ஆழமாய்ச் செல்லுவீர்கள்.

ஜெபங்கள், விண்ணப்பங்களைக் குறித்துப் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, "நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில்..." என்று துவங்குவதைக் கவனியுங்கள். (1 தீமோ.2:1) ஆம் மன்றாட்டு ஊழியம் என்பது நமது விருப்பு வெறுப்பைப் பொறுத்ததல்ல; நம்மீது விழுந்த தலையாய கடமை. நீங்கள் மன்றாடுவதற்காக முயற்சியெடுக்கத் துவங்கியதும் பல இடையூறுகள் உண்டாகும்; அவை நியாயமானவை போலவும் தென்படும். பிரசவ வாரத்திலிருக்கும் பெண் மணிக்குப் பிள்ளை பெற்றெடுப்பது ஒன்றே காரியம், கவனம்; மற்ற எதுவும் அவ்வளவு முக்கியமல்ல. அப்படியே, அறுப்பு நடந்து கொண்டிருக்கையில் களத்தின் பிறவேலைகளெல்லாம் பொறுத்திருக்கலாம்.

உபவாசத்தைக் குறித்தும் இங்கு சொல்வது பொருத்தமாயிருக்கும். உபவாசம் பண்ணுவதால் நாம் ஆண்டவருக்கு ஏதோ தயவு பண்ணுவதில்லை. கவனம் சிதறாது ஜெபத்தில் ஈடுபட வேண்டும் என்பதற்காகவே உபவாசிக்கிறோம். தேவைப்பட்டால், நியாயமான இன்பங்களான பாலுறவு போன்ற வற்றையும் ஒதுக்கி வைக்கலாம் என்பது பவுலின் அறிவுரை (1 கொரி.7:5) கவனியாது விட்டு விட்டால் மன்றாட்டுப் பணி மங்கிப் போய்விடும். விடா முயற்சியெடுத்தால் தான் அது வளரும். மன்றாட்டுக் கலையானது புத்தகங்களிலிருந்து அல்ல, முழங்கால்களிலேயே கற்க வேண்டியது.

7. அமுலாக்குதல் (Implementation)

அமுலாக்குதல்தான் மன்றாட்டு ஜெபத்தில் இறுதியான உச்சக்கட்டம். அதாவது, மன்றாடி ஜெபித்த பின்னர், அதைக் குறித்து ஆவன செய்ய முற்பட வேண்டும்.

கிறிஸ்துவின் ஊழியத்திலிருந்து ஓர் எடுத்துக்காட்டு இதனை நன்கு விளக்குகிறது. லூக்.6:12, "அந்நாட்களிலே அவர் ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்". "அந்நாட்களிலே" என்றால் அது அவர் தொடர்ந்து ஜெபித்ததொரு காலக்கட்டத்தைக் குறிக்கும். பன்னிரண்டு அப்போஸ்தலரைத் தெரிந்தெடுப்பதற்கான நடத்துதலைப் பிதாவானவரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் படியாய் மன்றாடிக் கொண்டிருந்திருப்பார். இது சாதாரண காரியமல்ல. அடுத்த வசனமே என்ன சொல்லுகிறது பாருங்கள்: "பொழுது விடிந்த போது, அவர் தமது சீடர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டு பேரைத் தெரிந்து கொண்டார்".(வச.13) அதாவது மன்றாட்டில் இரவுகளைச் செலவழித்த பின்னர், அதை அமுலாக்க சீடர்களிலிருந்து பன்னிரு அப்போஸ்தலரைத் தெரிந்தெடுப்பதில் முனைந்தார்.

"அறுப்பு மிகுதி, அறுவடையாட்களோ கொஞ்சம்" என்று ஆண்டவர் தமது சீடரிடம் கூறிவிட்டு, "அறுப்பின் ஆண்டவர் அறுவடைக்கு ஆட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள்" என்று அவர்களை ஏவினார். (மத்.9:37,38) அடுத்த வசனமே என்ன சொல்லுகிறது பாருங்கள்: அவர் தமது சீடரை அழைத்து அனுப்பி வைத்தார் (10:1,2)ஆம், மன்றாட்டு என்பது வெறும் ஜெபமல்ல; அது செயலில் இறங்குவது.

"பிதாவே, இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால்..." என்று இயேசு கெத்சமனே தோட்டத்தில் மன்றாடினார். (மத்.26:39) இது தமது மனுவுடலின் பலவீனத்தின் கதறல், ஆனால் இங்கு கவனிக்க வேண்டியது என்னவென்றால், அவர் தம்மையே அந்த ஜெபத்திற்குப் பதிலாக்கி விட்டார். "என் பிதா எனக்குத் தந்த துன்பக்கிண்ணத்தில் நான் பருகாதிருப்பேனோ?" என்பதற்கு வேறு என்ன அர்த்தம்? (யோ.18:11)

பல ஆண்டுகளுக்கு முன் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் பயிற்சி முகாமொன்று நடத்தினோம். இந்த நிகழ்ச்சியில் நான் முக்கிய செய்தியாளனாயிருந்தேன். நிகழ்ச்சியின் மூன்றாம் நாள்வரை, செலவுகளுக்கான, போதுமான பணமில்லை. மூன்றாம் நாள் காலையில் பயிற்சியறைக்குள் செல்லும் வழியில் ஜெபித்துக் கொண்டே போனேன். **"நான் வைக்கிருப்பவைகளைக் கொடுத்து விடும்வரை வேறு யாராவது கொடுக்க மாட்டார்களா என்று எதிர்பார்ப்பது நியாயமற்றது"** என்ற **ஜார்ஜ் முல்லரின்** (1805-1898) வார்த்தைகள் எனது நினைவுக்கு வந்தன. வங்கியில் எனக்கு இருப்புத் தொகை எதுவும் அன்றில்லை. கொஞ்சங் கொஞ்சமாகச் சேர்த்து வைத்திருந்த தொகையைக் கொண்டு வேலூருக்கருகில் நான் வாங்கியிருந்த இரு மனை நிலங்களைக் கர்த்தர் எனக்கு நினைப்பூட்டினார். நான் வாங்கிய ஒரே சொத்து அதுமட்டும் தான். உடனே கர்த்தருக்கு கீழ்ப்படியத் தீர்மானித்தேன். எனது மனைவியின் ஒப்புதலோடு பத்திரத்தை இயக்கத்தின் பிற தலைவர்கள் கையில் கொடுத்து விட்டேன். எங்களது ஒரே மகள் அதை அந்த கூடுகையில் கொடுத்தாள். நண்பர்களே, ஜெபத்திற்குப் பதில் கிடைப்பது ஆசீர்வாதம்தான்; ஆனால் ஜெபத்திற்கு நாமே பதிலாகுவதில் என்னே பரவசம்!

சந்திக்கப்படாத ஒரு மக்களினத்திற்காய் ஒருவேளை நீங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கலாம். யாருக்குத் தெரியும், நீங்களே அந்த ஜெபத்திற்குப் பதிலாக வேண்டியதிருக்கலாம்! ஆண்டவர் உங்களை அழைக்கும் போது, **மோசேயைப்** போல, "இதோ இருக்கிறேன், ஆனால் ஆரோனை அனுப்பும்" என்று சொல்லி விடாதீர்கள். செயல்படுவதற்கு ஜெபமானது பதிலாகாது. எல்லாமே கடவுள் மீதே சார்ந்திருக்கிறதென்றெண்ணி ஜெபிக்க வேண்டும்; எல்லாமே உங்கள் மீதே சார்ந்திருக்கிறதென்றெண்ணிச் செயல்பட வேண்டும்!

மன்றாட்டு ஜெபக் கலையில் நாம் போதிக்கப்படவும் வேண்டும்; தேறின வர்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளவும் வேண்டும். இது ஒரு சிலருக்கு "வரமாகக்" கொடுக்கப்படுகிறதென்பது உண்மையெனினும், எல்லா விசுவாசிகளும் முடிந்த அளவில் அதில் ஈடுபட வேண்டும். **நாம் மன்றாடினால் போதாது; மன்றாட்டு வீரரை எழுப்பவும் வேண்டும். அக்கினி அக்கினியைப் பிறப்பிக்கும்!**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ்துவின் ஆவியால் . . .

மேலும் கிறிஸ்து நமது ஆழமான பரிசுத்தமாக்குதலின் தேவையை நிரப்புகிறார்: அவருடைய கிருபையால் பாவநிவாரணத்தைச் செய்தார். அவர் மூலமாக மட்டுமே இதனை ஒரு இலவச ஈவாக பெற்றுக் கொள்ள முடியும். "அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள் ...." (கொரி.1:30) பரிசுத்தமாக்குதலில் பாவம் நிறைந்த சுயம் சாகடிக்கப்படுகிறது. பாவம் ஏற்கெனவே சிலுவையில் அறையப்பட்டுவிட்டது. நம்மை அவரிடம் முற்றிலுமாக அர்ப்பணம் செய்ய வேண்டும். அவர் நம்முடைய பாவமாகிய சுயத்தை கொன்று அவருடைய கல்லறையில் நித்தியமாக அடக்கம் செய்து விடுவார். சுத்திகரிக்கப்படுதல் என்பது பரிசுத்தம், நீதி, சமாதானம், சந்தோஷம் ஆகியவைகள் அடங்கியதா? இன்னும் அழுத்தமாகச் சொல்லப் போனால் கிறிஸ்துவே நமது ஜீவன், நமது சமாதானம், நமது நீதி, நமது முழுமையும் நமது நிரம்பி வழியும் சந்தோஷமுமாயிருப்பார்.(கொரி.1:31)

மேலும் அவர் நமது இருதய வாழ்வின் நிறைவு: கிறிஸ்து தமது இருதயத்தையும் அவரது ஆவியையும் தந்து, தேவனை முழு இருதயத்தோடும் முழு பெலத்தோடும் முழுமனதோடும் நேசிக்கிற உள்ளத்தையும் தருவார். (லூக்.10:27) அவர் நம்மை நேசித்தது போல நாமும் ஒருவரையொருவர் நேசிக்கும் இருதயத்தையும் தருகிறார் (யோ.13:34; 15:12) இப்படிப்பட்ட ஆசீர்வாதம் எத்தனை பெரிது? அவர் கடினமானதும் வேறு பட்டதுமான தேவைகளை நிரப்பி விடுகிறார்.

மேலும் நமது புத்தி பூர்வமான வாழ்வின் எல்லாத் தேவைகளையும் நிரப்புகிறார்: நமது மானசீக திறமைகள் அவற்றின் முழு வல்லமையையும் ஆவிக்குரிய நற்பலன்களையும் அறிய அவருடைய உயிர்ப்பிக்கும் வாழ்வின் பாத்திரங்களாக மாற வேண்டும். நமது மூளைகள் அவரது பரிசுத்த அக்கினியை வைக்கும் தூபகலசமாக அவரது பாதத்தில் அர்ப்பணிக்கப்பட வேண்டும். அவர் நம்மிலிருந்து சிந்திக்கவும், ஞாபகப்படுத்தவும், நியாயந்தீர்க்கவும் திட்டம் தெளிவாய் நமக்குப்

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

போதிக்கவும், அக்கினி நாவைத் தரவும், பிரகாசிக்கவும் உருகவும் செய்யக் கூடிய திருஷ்டாந்தங்களைத் தரவும், துரிதமாக வெளிப்படுத்தும் நாவு வன்மையும் மற்றும் வேலையாட்களாக நம்மை மாற்றுவதற்குரிய எல்லா தகுதிகளையும் தருகிறார். "நீ வெட்கப்படாத ஊழியக் காரனாகவும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிற வனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதைப்படு" *(2 தீமோ.2:15)* அவரது பரிசுத்த போதனைகளுக்கு கவலையீன மானவர்களாக அல்ல அவர் நடத்துவது போல நமது குறைகளை உடனுக்குடன் கண்டு அவரது முழுத்திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டும். நாம் தேவனால் போதிக்கப்பட வேண்டும். அவரது போதனைகள் சில வேளைகளில் மிகவும் கிரமமாகவும் மிகவும் மெதுவாக வுமிருக்கலாம். ஆனால் "சத்திய ஆவி யாகிய அவர் வரும் போது சகல சத்தி யத்துக்குள்ளும் உங்களை வழி நடத்து வார்" *(யோ.16:13)* மற்றும் சங்.138:8-ன் படி, எல்லாவற்றையும் செய்து முடிப் பார். அவரது பணிக்காகவும் சித்தத்துக் காகவும் நமது கல்வி, ஆயத்தம் அனைத் தையும் தூய ஆவியானவர் உயிர்ப்பிக் கிறார்.

மேலும் நமது சரீர தேவைகளை அவர் நிரப்புகிறார்: மரித்தோரிலிருந்து அவரது உடல் எழுப்பப்பட்டபடியால் அவரு டைய சரீரமாகிய சபையின் எல்லா அவயவங்களும் சரீர சக்தியையும், மனித வாழ்வில் வரும் எல்லா அழுத்தங் களையும் சமாளிக்கவும், சோதனை களை மேற்கொள்ளவும் எல்லா அடிகளும் நோய் பாடு, ஆபத்துகளால் நிறைந்திருக்கும் போதும் வலிமையின் ஊற்றாயிருக்கிறார். மீட்கப்பட்ட சரீரத்திற்கு கிறிஸ்து உண்மையாக ஜீவனாயிருக்கிறார். அவரது தூய ஆவி இந்த மண்ணான சரீரங்களை மேலான வல்லமைகளால் உயர்த்துகிறார்.

மேலும் கிறிஸ்து எல்லா சூழ்நிலைகளிலும் நமது அழைப்புகளின் தேவைகளிலும், அனுதின வாழ்விலும் நம்மை நிரப்புகிறார்: எல்லா நன்மை களுமே அவரிடமிருந்துதான் வருகின்றன. எனவே நமது தேவைகள் அனைத்திலும், வாழ்நாள் முழுவதும் அவரது அன்பு நமது இருளை ஒளியாகவும், கஷ்டங் களை வெற்றியாகவும், துக்கங்களை சந்தோஷமாகவும், பூலோகத்துக்குரிய வைகளை பரத்துக்குரியவைகளாகவும் மாற்றி அவர் தமது கிருபையையும் வல்லமையையும் விளங்கப் பண்ணட்டும். அதன் மூலம் பீடங்களிலிருந்து செய்தி களைக் கேட்காதவர்களும், அவருடைய கிருபைகளின் வரலாறுகளை வாசித்து அறியாதவர்களும் அவரைக் காண முடியும்.

சுகமளிப்பு ஊழியப் பத்திரிகை ஒன்றை வாசித்தால் மிஷனரிப் பத்திரிகைகள் குறைந்தது பத்தாவது வாசிக்க வேண்டும் என்று சொல்லுவேன். அதுதான் உங்களைச் சமநிலைப்படுத்தும்!

மேலும் நமது சந்தோஷங்களைக் கிறிஸ்து நிரப்புகிறார்: அவர் தான் நமது சமாதானம் சந்தோஷம் ஆகியவற்றின் நிறைவு. அவர் உண்டுபண்ணிய ஆத்துமாக்களின் உண்மையான பங்கு. அவர் நிரப்பும் போது கவலை, பயம் ஆகியவற்றிற்கு இடமேயில்லை.

இறுதியாக எல்லா நிறைவுகளுக்கும் அடிப்படை யான விசுவாசத்தினை அவர் நிரப்புகிறார்: கிறிஸ்து நமக்குள்ளிருக்கும் போது நமது வாழ்வு உயர்வு பெறுகிறது. நமது உயரிய மிகக்கடினமான முயற்சி களிலும், துணிச்சலான செயல்களிலும் விசுவாசத்தை விடாமலிருக்க முடி கிறது. எனவே மாற்.9:23-ன்படி "விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்".

தெய்வீக வாழ்வால் எல்லாப் பகுதிகளிலும் மட்டுமல்ல ஒவ்வொரு நிமிடமும் நிரப்பப்படுகிறோம்.

அவர் நம்மில் நம் உணர்வோடும் அவரது நிறைவோடும் வாழுகிறார். அவர் ஒரு நீரூற்று, வாழ்வு தொடர் வதும் செயல்படுவதும் தொடர்ந்து பாய்ந்து வெளியே செல்வதும் அதோடு உள்ளே பாய்ந்து வருவதுமாகும். தொடர்ந்து புதிய நீரை ஜீவ நீரூற்றி லிருந்து பெறாவிட்டால் நாம் வெறுமை யாய் ஆகிவிடவோ அல்லது கட்டி நின்று விடவோ வாய்ப்பு ஏற்படலாம். எனவே எப்போது நிறைந்தும் நிரப்பப் பட்டும் கொண்டிருப்பது மிக அவசியம்.

சில சமயங்களில் ஆவிக்குரிய உயர்வுகள் தேவ திட்டப்படி ஏற்பட லாம். ஒரு மேன்மையான நிலையில் அவரோடு இணைந்து வாழும் வாழ்க்கை யினைப் பெறலாம். ஆனாலும் பெந்தே கோஸ்தின் அனுபவங்களும், இரண் டாம் பெந்தேகோஸ்தின் அனுபவங் களும் புதிய நிரப்புதல்கள் பிரளயம் போல ஏற்படலாம். ஆனால் அடிக்கடி யாகவும் நீண்ட இடைவெளி விட்டும் இந்த அனுபவங்கள் ஏற்படலாம். இவையெல்லாம் ஆவிக்குரிய நிலைப் பாட்டிற்கும் ஆரோக்கியத்திற்கும் அவசியம். "தேவன் இவ்வித அனுபவங் களில் நம்மை நடத்துகிறார்". "அது வானத்தின் செல்வத்தினாலும், பனியி னாலும், ஆழத்திலுள்ள நீரூற்றுகளி னாலும், சூரியன் பக்குவப்படுத்தும் அருமை யான கனிகளினாலும், சந்திரன் பக்குவப்படுத்தும் அருமையான பலன் களினாலும் ஆதி பர்வதங்களில் உண்டாகும் திரவியங்களினாலும், நித்திய மலைகளில் பிறக்கும் அரும் பொருள்களினாலும், நாடும் அதின் நிறைவும் கொடுக்கும் அருமையான தானியங்களினாலும் ஆசீர்வதிக்கப் படுவதாக". *(உபா.33:13-16)*

தெய்வீக நிரப்புதலின் பயன்கள்

இதுவே தூய்மையின் இரகசியம்: மறு படியும் பிறந்த ஆத்துமாவில் தூய ஆவியின் வாழ்வு ஒரு அளவில் காணப் படுகிறது. நம் ஒவ்வொரு பகுதியும் அவர் அன்பால் நிரப்பப்பட்டு அவரது மகிமைக்கு உட்படும் போது நாம் முழுவதுமாக சுத்திகரிக்கப்படுகிறோம். இவ்வித தெய்வீக நிறைவு சுயத்தையும் பாவத்தையும் மேற்கொள்ளவிடுவ தில்லை.

தேவனுடைய சித்தத்திற்கு முழுவதுமாக ஒப்புக்கொடுத்து பரிசுத்த இருதயத்தோடும், பரிசுத்த எண்ணங் களோடும் வாழுகிறீர்களா? 'ஆவியினால் நிரம்பி' ....'அவருடைய நிறைவினால் கிருபை மேல் கிருபை பெற்றோம்'. பரலோக வெள்ளம் எல்லா வாய்க் கால்கள் வழியாகவும், எல்லா வயல் நிலங்களிலும் பாய்ந்து கிறிஸ்தவ வாழ்வில் கிருபைகளெல்லாம் அவரது கிருபையால் பெருகி, தேவனுடைய தோட்டம் பூத்துக் குலுங்கட்டும். அவரில் நிலைத்திருந்தால் மிகுந்த கனிகளைக் கொடுப்போம்.

இதுவே சந்தோஷத்தின் இரகசியம்: அரை குறையாக நிரப்பப்பட்ட இருதயம் அதன் குறைவைக் குறித்த உணர்வு டையது. மேச்சல் ஆடுகள் வயிறு நிரம்பியதும் பசும்புல் தரையில் படுத்துக் கொள்கின்றன. அதுபோல நம்முடைய இருதயம் நிரப்பப்பட வேண்டும். "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும் படிக்கும் உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும் படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" *(யோவா.15:11)*

இதுவே வல்லமையின் இரகசியம்: மின்சக்தி ஒரு சிறிய உலோகக் கம்பி வழியாகச் சென்று தொழிற்சாலையின் சக்கரங் களை இயங்கச் செய்கிறது. கிராமங் களில் ஓடும் வாய்க்கால்கள் அனேக தொழிற்சாலைகள் இயங்க சக்தி அளிக் கின்றன. ஏனெனில் அவை நிரம்பி வழிகின்றன. நிரம்பி வழியும் இருதயங் கள் தான் பயனுள்ள தேவ பணி செய்யக்கூடும். நம் வாழ்வு நிரம்பி வழிந்தால் மட்டுமே பிறர் ஆசீர்வதிக்கப் பட முடியும்.

நிரப்பப்படுவதற்கான நிபந்தனைகள்

அவர் பசியுள்ளவர்களை நிரப்புகிறார்: "நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் திருப்தி யடைவார்கள்" *(மத்.5:6)* ஆழமான வாஞ்சைதான் நாம் தேடும் ஆசீர் வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஆரம்பம். ஏற்கனெவே உங்கள் இருத யத்தை ஆயத்தப்படுத்திவிட்டார். தனது குறைவுகளையும், தேவை களையும், தோல்விகளையும் ஆழமாக உணருகிற ஆத்துமா விரைவாக அவரது நிறைவைப் பெற்றுக் கொள்ளும். அந்த உணர்வு உங்களில் ஏற்படட்டும். அது உங்களை இரக்க ஆசனத்திற்கு நேராக வழிநடத்தி, காத்திருந்து கதறி நிரப்பப் படுமட்டும் எதிர்பார்த்திருக்கச் செய் யட்டும். உபா.33:23-ல் கூறப்படுவது போல "கர்த்தருடைய தயவினால் திருப்தியடைந்து அவருடைய ஆசீர் வாதத்தினாலே நிறைந்திருப்பான்".

வெறுமையானவர்கள் எப்போதும் நிரப்பப் படுவார்கள்: "பசியுள்ளவர்களை நன்மை களினால் நிரப்பி..." *(லூக்.1:53)* "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்,

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பரலோகராஜ்யம் அவர்களுடையது" (மத்.5:3) "...தரித்திரர் என்னப்பட்டாலும் அனேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும் சகலத்தையும் உடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்"(2கொரி.6:10) இது தான் கிருபையின் விளைவு. தேவனுக்கு இடமில்லையென்றால் நாம் நிரப்பப்பட முடியாது. எல்லாப் பெரிய ஆசீர்வாதங்களும் பெரிய தியாகங்களுடனும், பெரிய கண்டிப்பு, பெரிய இழப்பு ஆகியவற் றோடு தான் ஆரம்பமாகும். "...அழைத்துக் கொண்டு போய் அதை நமக்குக் கொடுக்கும்படி, எங்களை அவ்விடத்திலிருந்து புறப்படப் பண்ணினார்" (உபா.6:23) தனது முழுசுதந்திரத்தையும் பெற்றுக் கொள்ள ஆபிரகாம் லோத்து தெரிந்து கொண்ட பகுதியை விட்டுக் கொடுத்தான். தனது எதிர்கால தேவாலயத்தை அமைக்கும்படியாக ஈசாக்கு மோரியா மலையில் பலியிடப்பட வேண்டும். தேவனுடைய பெரிய அழைப்பைப் பெற்ற மோசே எகிப்தின் எல்லா வசதிகளையும் விட வேண்டியதாயிருந்தது. இயேசுவாலும் தூய ஆவியாலும் நிரப்பப்பட இருதயத்தின் சுயம், உலகம் ஆகியவை அகற்றப்பட வேண்டும்.

பொருட்களால் நெருக்கி நிரப்பப்பட்ட இருதயத்தினை தேவன் நிரப்ப முடியாது. எனவே நாம் வெறுமையாக்கப்படுவது அவசியம். "இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள், நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காணமாட்டீர்கள். ஆனாலும் நீங்களும் உங்கள் ஆடுமாடுகளும், உங்கள் மிருக ஜீவன்களும் குடிக்கும்படிக்கு இந்த பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும்..." (2 இராஜா.3:16-17) தாழ்மையின் பள்ளத்தாக்கில் இருக்கிறோமா? ஆழமான தேவைகள் பற்றாக்குறைகள் இருக்கிறதா? தேவன் தான் திருப்திப் படுத்துகிறவர். சுயசித்தம், லௌகீகம் மற்றும் பாவம் ஆகியவற்றை விட்டு விட்டீர்களா? நமது சொந்த பெலன், விசுவாசம், மார்க்க அனுபவம் இவற்றை ஒதுக்கி விட்டு கிறிஸ்துவுக்கு முழு இடத்தையும் அளித்து விட்டீர்களா?

திறந்த இருதயம் நிரப்பப்படும்: "உன் வாயை விரிவாய்த் திற நான் அதை நிரப்புவேன்". (சங்.81:10) மலர் மொட்டு தன் இதழ்களை மூடுவதும் சூரிய ஒளிக்கும், மழைக்கும் திறந்து கொடுப் பதையும் நாம் அறிவோம். இருதயம் கொள்ளவும், ஏற்றுக் கொள்ளும் தன்மையுடையது. ஆனாலும் அது அடிக்கடி அவிசுவாசத்தாலும், சந்தேகத் தாலும், பயத்தாலும், சுய உணர்வி னாலும் இறுகிக் கொள்வதால் தேவன் அதற்குள்ளே ஊற்றக் காத்திருக்கும் அன்பினை பெற்றுக் கொள்ள முடிவ தில்லை.

இதனைப் பார்த்து, "எருசலேமே, எருசலேமே ...கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன் உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று". (மத்.23:37) பல மாதங்களாக செத்துக் கொண்டிருந்த ஒருவரை அறிவேன். அவர் ஒரு சிறு தானியத்தின் அளவி லான உணவைக் கூட விழுங்க முடியாதவர். அவரைப் போல அனேகக் கிறிஸ்தவர்களுடைய தொண்டை சுருங்கி விட்டது. உணவு ஏராளமிருந் தாலும் பட்டினி கிடக்கிறார்கள். உறுதி, நம்பிக்கை, அன்பு ஆகியவை நம்மிலி ருந்து, விசுவாசத்தின் மூலம் ஆவியின் அமைதலைப் பெற்று இருதயம் அதிக நேரம் திறந்திருந்து முழுவதும் நிரப்பப் பட வேண்டும்.

மேலும் இடைவிடாமல் ஜெபத்தின் மூலம் காத்திருப்பதால் நிரப்பப்பட முடியும்: சீஷர்கள் காத்திருந்து பரிசுத்த ஆவியால் நிரப்பப் பட்டார்கள். ஜெபம் என்பது கேட்பது மட்டுமல்ல அது பெற்றுக் கொள்வது மாகும். அனேகர் நிரப்பப்படும் வரை காத்திருப்பதில்லை. உணவை வெகு விரைவாக உண்பது போல தூய ஆவியானவரை விரைவாகப் பெற்று நிரப்பப்பட முடியாது. விசேஷித்த காத்திருக்கும் காலங்களும் இடை விடாது ஆண்டவரில் நிலைத்திருப் பதும் அவசியம். இவற்றை ஒன்றை பெரும் புயலுக்கும் பிரளயத்துக்கும் ஒப்பிட்டால் இன்னொன்றை காற்றி லுள்ள ஈரப்பதத்திற்கும் காலை மாலை பெய்யும் பனிக்கும் ஒப்பிடலாம். சரியான ஆவியோடும் முழுமையான அர்ப்பணிப்பு, நம்பிக்கை இவற்றோடு காத்திருந்தால் முழுமையான தூய ஆவியின் ஸ்தானத்தை ஆண்டவர் கொடுப்பார். நாம் இந்த அனுபவத்தில் அன்பு அவருடைய ஜீவன் ஆகியவற்றில் வழிந்து ஓடுகிறவர்களாயிருக்க வேண் டும். வல்லமையும் ஆசீர்வாதமும் நமது வாழ்விலும் பிறர் வாழ்விலும் ஏற்படும்.

தொடர்ந்து நிரப்பப்பட தேவனுக்கும் பிறருக்கும் சேவை செய்ய வேண்டும்: நாம் ஆசீர்வாதங் களைப் பிறருக்கு ஊற்றிக் கொடுக்கும் போது தேவன் நம்மில் தமது ஆசீர் வாதங்களை ஊற்றித் தருவார்.

நாம் அரைகுறையாயிருக்கும் போது தேவனிடம் கேட்க வேண்டும். சில கிறிஸ்தவர்களிடமிருந்து பாய்ந்து வரும் ஆசீர்வாதங்கள் மிகக் குறைவாக வருவதால் அவை ஏழை தாகமான வழிப்போக்கனுக்கு ஒரு பானம் கூட அளிக்க முடிவதில்லை.

தேவன் தருகிற ஆசீர்வாதங்களை நாம் பிறருக்குப் பகிரும் போது நாம் அளவில்லாமல் ஆசீர்வதிக்கப்படுகி றோம். ஆண்டவர் தரும் ஆசீர்வாதங் களை நாம் பயன்படுத்த வேண்டும். ஆண்டவரை ஏற்றுக் கொள்ளும் அனை வருக்கும் இரட்சிப்பு உண்டு. ஆவியின் நிறைவைப் பெற்றுக் கொள்ளாதோர், அவரது ஒளியைப் பிரகாசிக்க முடியாமல் அது மங்கி விடுவதால் நமது ஆசீர்வாதங் களை அறிவிக்க முடியாது. இன்னொரு வருக்காக நாம் ஜெபிக்கும் போது தூய ஆவியானவரின் அபிஷேகம் உதவி செய்கிறது. ஓர் எளிய நோயாளியை சத்தியத்துக்கு நேராக வழிநடத்தும் போது கிறிஸ்துவின் குணமாக்குதல் நமது மாம்சத்திலிருந்து அவருக்கு பாய்ந்து செல்லுகிறது. இரட்சிப்பும் அதன் சந்தோஷமும் நாம் வழி நடத்து கிறவர்களுக்குள் பாய்ந்து செல்லுகிறது. நாம் அவர்களை நீரூற்றினண்டை அழைத்து மட்டும் செல்ல வேண்டும்.

ஆண்டவருடைய பெரிய ஆசீர் வாதமான வாக்குத்தத்தம் இதுவே: "**...ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்**". (யோவா.7:37,38)

முக்கிய அறிவிப்பு

10-ம் தியதிக்குள் பத்திரிகை வரத் தவறினால் உடனே தகவல் தாருங்கள்.

Mobile : **95432 21008**

Whatsapp : **94897 40295**

e-mail:varukayinthoothan@hotmail.com

Contact:

VARUKAYIN THOOTHAN

7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

"**நமது**" தலைவலி, இடுப்புவலி, கால்வலியைப் பற்றித்தான் நமக்குக் கவலை; "**இறைவனது**" இதய வேதனையை உணருவது யாரோ? அவரது உள்ளத்தை உடைக்கும் எதுவும் நமது உள்ளங்களையும் உடைக்கட்டும்!

நாம் ஆசீர்வாதங்களைப் பிறருக்கு **ஊற்றிக்** கொடுக்கும் போது தேவன் நம்மில் தமது ஆசீர்வாதங்களை **ஊற்றித்** தருவார்.

நமக்கு **மூச்சுப்** பிடித்துப் பாடத் தெரியும்;
ஜெபத்தில் **பெருமூச்சுவிடத்** தெரியுமா?

ஆவியின் நிறைவைப் பெற்றுக் கொள்ளாதோர், அவரது **ஒளியை**ப் பிரகாசிக்க முடியாமல் அது **மங்கி** விடுவதால் நமது ஆசீர்வாதங்களை அறிவிக்க முடியாது.

எவர் ஒருவருக்காகவும் நீங்கள் மண்டியிட்டுக் "**கதறும்வரை**" அவரைக் "**கண்டனம்**" செய்வதற்கு உங்களுக்கு உரிமையில்லை. மற்றபடி, அது வெறும் குறை காணலாகிவிடும்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason